# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION
(Regd. No : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : #M.61. TNHB Qtrs,Complex, Kanchipuram - 631502
web : www.tntcia.com

L. SENTHIL, B.C.A.,D.C.P.,T.T.C., State President, CELL : 9443082572

J. BARATHAMANI, T.T.C., State General Secretary, CELL : 9003489826

L. MANOHARAN, T.T.C., State Treasurer, CELL : 9442883275

V. KALAIVANAN, B.COM, M.A, PGDCA., Vice Presedent

M. DURAIPANDI, B.A, T.T.C., Joint Secretary

A.M. SATHYAN, Vice President

V. CHANDIRASEKARAN, M.A, M.COM, B.ED., Joint Secretary

M. KARTHIKEYAN, M.COM, M.PHIL, M.A, D.L.L, A.L., Founder Adviser

D.A. DHARMARAJ, B.A., Honorary President


நாள்: 22.07.2020

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,**
முதல்வரின் தனிப்பிரிவு,
தலைமைச் செயலகம்,
சென்னை — 600 009.

**மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பணிவான வணக்கங்கள்..**

கடந்த பிப்ரவரி 2020 ம் மாதம் தொழில்நுட்பத் தேர்வு வாரியத்தின் மூலம் நடத்தப்பட்ட தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வில் சுமார் 1.50 லட்சத்திற்கும் மேலான மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். இதன் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் அனைத்தும் மார்ச் மாதம் கொரோனா ஊரடங்கிற்கு முன்னதாகவே திருத்தி முடிக்கப்பட்டுவிட்டன. தமிழகத்தில் ஒரே ஒரு மையத்தில் மட்டும் மிகச்சொற்ப அளவிலான விடைத்தாள் திருத்தாமல் இருந்து அதுவும் 1 மாதத்திற்கு முன்பாகவே திருத்தி முடிக்கப்பட்டுவிட்டன.

இந்தநிலையில் தேர்வு முடிந்து நான்கு மாதங்களைக் கடந்த நிலையிலும் இன்னும் தேர்வு முடிவுகள் தேர்வு வாரியத்தால் வெளியிடப்படவில்லை. இதனால் தேர்வு எழுதிய லட்சக்கணக்கான மாணாக்கர்கள் முடிவுகள் தெரியாமலும், அரசு வேலைவாய்ப்பினை பெறும் முயற்சியில் தங்களது அடுத்தக்கட்ட நடவடிக்கை பற்றி செய்வதறியாது குழப்பத்தில் இருக்கின்றனர். மேலும் தேர்ச்சி முடிவுகள் வெளிவருவதில் காலதாமதமாகின்ற காரணத்தினால் அடுத்து சான்றிதழ் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்பட்டு வர இருக்கின்ற அரசுத் தேர்வாணையத் தேர்விற்கு தகுதி பெற முடியுமா? என்ற அச்சமும் மாணாக்கர்களிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த கொரோனோ சூழ்நிலையில் தாமதமாக விடைத்தாள் திருத்தும் பணி துவங்கினாலும் 8 லட்சத்திற்கும் மேலான மாணாக்கர்கள் கலந்து கொண்ட பனிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வின் விடைத்தாள்கள் அனைத்தும் திருத்தப்பட்டு அதன் முடிவுகள் சமீபத்தில் தமிழக அரசால் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி 2020ம் மாதம் நடைபெற்ற அரசுத் தட்டச்சு சுருக்கெழுத்து தேர்வு முடிவுகளை எதிர்நோக்கி தேர்வு எழுதிய லட்சக்கணக்கான மாணவ மாணவியர்கள் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

எனவே தமிழக அரசு இதனைக் கருத்திற்கொண்டு மாணவர்களின் நலன் கருதி கடந்த பிப்ரவரி 2020ம் மாதம் நடைபெற்ற **அரசு தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்விற்கான முடிவுகளை** விரைந்து வெளியிட தொழில்நுட்பத் தேர்வு வாரியத்தினை வலியுறுத்த வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

22/7/2020

**(எல்.செந்தில்)**
**மாநிலத் தலைவர்.**